## தமிழகத்திற்கு அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# சேலம் மத்திய மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கண்டனப் பொதுக்கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



தமிழர்களின் இயக்கம், தமிழினத்தின் மேன்மைக்கான இயக்கம், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களும் இளம் தலைவர் அவர்களும் நம் மொழி - இனம் காக்க பல்வேறு போராட்டங்களை வென்றெடுத்தவர்கள்.

சமூக நீதி மற்றும் மாநில சுயாட்சி குரல் இன்று இந்திய துணை கண்டம் முழுவதும் கேட்கின்றது. ஏன் எதையும் தமிழ்நாடு மட்டும் எதிர்க்கின்றது என்று கேட்பவர்கள் மத்தியில், இதோ அந்த பட்டியலில் இந்தியாவின் பல மாநிலங்கள் சேர்கின்றது என்று சாதித்து காட்டியவர் நம் கழகத் தலைவர் அவர்கள்.

தமிழ்நாட்டை வளர்ந்த பொருளாதார மாநிலமாக உயர்த்தி காட்டியவர் நம் தலைவர் அவர்கள். அதை பொறுக்க முடியாத ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதியை கூட தர மறுக்கின்றது.

எப்போதெல்லாம் இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்துடன் எல்லைப் புறமாகவோ கொல்லைப் புறமாகவோ நுழைய முயல்கிறதோ அப்போதெல்லாம் நம் இயக்கம் விழிப்புடன் இருந்து தமிழ்நாட்டை பாதுகாத்து வருகின்றது.

தந்தை பெரியார் மூட்டிய தீயை பேரறிஞர் அண்ணா திக்கெட்டும் பரவச் செய்தார். தண்டவாளத்தின் தலை வைத்து தமிழை காத்தவர் நம் உயிர் நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தி திணிப்பை என்றும் எதிர்க்கவும், நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து இளம் தலைவர் வழிகாட்டுதலின்படி இளைஞர் அணியின் சார்பாக சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்கண்ட தேதிகளில் கண்டனப்பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகர பகுதி வட்டக் கழக, ஒன்றிய கிளைக் கழக, பேரூர் வார்டு கழக, பொறுப்பாளர்கள் இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: அனைத்து கண்டன பொதுக்கூட்டங்களிலும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் உறுதிமொழியை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும் என மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | சட்டமன்ற தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 08.03.2025 | சேலம் வடக்கு | அஸ்தம்பட்டி பகுதி<br>கோரிமேடு | ஐ.பரந்தாமன்<br>செ.யோக ஸ்ரீ |
| 09.03.2025 | சேலம் தெற்கு | கொண்டலாம்பட்டி பகுதி | வழக்கறிஞர் அ.சரவணன்<br>சூரிய பிரகாஷ் |
| 10.03.2025 | சேலம் மேற்கு | ஓமலூர் கிழக்கு ஒன்றியம்<br>கோட்டகவுண்டம்பட்டி | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ்<br>சேலம் சரண்யா |
| 11.03.2025 | ஓமலூர் | காடையாம்பட்டி கிழக்கு<br>ஒன்றியம்<br>கே.மோரூர் | சௌமியன் வைத்தியநாதன்<br>ச.அஜித்குமார் |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர்
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.






# அமித்ஷாவின் அர்த்தமற்ற ஆணவப் பேச்சு!

தமிழ்நாடு அமைச்சர்கள் பா.ஜ.க செய்யும் ஆணவச் செயல்களை கண்டித்து கருத்துச் சொன்னால் அண்ணாமலை ஆவேசமாக அமைச்சர்கள் இப்படி கண்ணியக்குறைவாக பேசலாமா எனவே நானும் பேசுகிறேன் என்று ஒருமையில் பேசி வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அவரது காற்றில் போகிற கசப்பான கண்ணியக் குறைவான வார்த்தைகளால் எங்களுக்கு காயமும் ஏற்படப்போவதில்லை கவலை கொள்ள வைக்கப் போவதுமில்லை. அரசியலில் அடி உதை பட்டு யாருக்கும் அஞ்சிடாமல் வீரத் தோள்கள் விம்மி எழுப் பவனி வருபவர்கள் தான் நாங்கள்.

அண்ணாமலைக்கு அரசியல் அறியாத பாடம். தினம் தினம் செய்தியாளர்களைப் பார்த்து சவால் விட்டால் சண்டியரைப் போல் பேசினால் போதாது. ஒரு பத்திரிக்கையாளர் (புதிய தலைமுறை) கேட்டக் கேள்விக்கு அங்கேயே பதில் சொல்ல முடியாமல் அறைக்குள் வாருங்கள் பதில் தருகிறேன் என்று கோவப்பட்டு பேசிய விதத்தை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர்.

ஒரு பத்திரிக்கையாளரை கூட கையாளத் தெரியவில்லை. சவால் விடுவதற்கு மட்டும் குறைச்சலில்லை. இந்தித் திணிக்கப் போவதை கண்டித்து முதன் முதலில் தீக்குளித்து மாண்டானே கீழப்பழுவூர் சின்னச்சாமி அவன் கண்ணெதிரே மனைவி கமலாவும் மகள் திராவிடச் செல்வி தாயின் இடுப்பில் இருக்க இந்தி ஒழிக தமிழ் வாழ்க என்று முழக்கமிட்டவன் தான் அந்த தியாக மறவன். அவருக்கு பின் பலர்.

இந்த வரலாறெல்லாம் அண்ணாமலைக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. அப்போது அவர் பிறந்திருக்கவே மாட்டார். நான் சென்ஸ் என்று தமிழர்களைப் பார்த்து கூறிவிட்டு ஜவஹர்லால் நேரு பட்டபாடு அண்ணாமலைக்கு தெரியாது. முதலில் திராவிட இயக்க வரலாற்றை ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பாருங்கள். நேருவுக்கு அண்ணா அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா? பெரிய மனிதர் நாவில் சின்ன வார்த்தைகள் என்பதாகும். எவ்வளவு நாகரிகம் பார்த்தீரா! அப்படிப்பட்ட அறிஞர் அண்ணாவால் வளர்க்கப் பட்டவர்கள் திராவிட இயக்கத்தினர்.

இது போன்று பல சம்பவங்கள் எழுதிக் கொண்டே போகலாம். அவைகளை எழுதினால் உண்மையிலேயே மனம் இருந்தால் அண்ணாமலை பா.ஜ.கவில் இருந்து விலகிய தமிழன் என்ற பெயரைப் பெறுவார். அறிஞர் அண்ணாவைப் போல் ஒரு தலைவரை பா.ஜ.கவில் அண்ணாமலை கூறுவாரா? தந்தை பெரியார் அஞ்சாத சிங்கம். முதல் திருத்தம் அரசியல் சட்டத்தில் ஏற்பட காரணமானவர். தனது 95 வயதில் தி.நகர் கடைசி கூட்டத்திலும் தனித் தமிழ்நாடு கேட்ட தமிழ் வேங்கை. அவரைப் போல் ஒரு துணிச்சல்காரரை பா.ஜ.க.வில் கூற முடியுமா?



**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

அமித்ஷா இந்தியாவின் உள்துறை அமைச்சர், அதற்குரிய மரியாதையை நாம் தருகிறோம். ஆனால் பேசிய பேச்சு மரியாதைக்குரிய பேச்சா? தமிழ்நாட்டில் ஊழல் அதிகரித்து விட்டதாம். தேசவிரோத சக்திகள் வேரோடு பிடுங்கி எறியப்படுமாம். சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் சீர்கெட்டு விட்டதாம்.

ஒன்றிய அமைச்சர் பா.ஜ.கவின் முக்கிய தலைவர் பேசியுள்ள பேச்சைப் பார்த்தீரா? எவ்வளவு பொறுப்பற்றத்தனம்? ஊழல் அதிகரித்து விட்டதாம். எந்த ஊழல் என்று ஏதாவது ஒன்றை குறிப்பிட்டு சொல்ல முடிந்ததா? தேசவிரோத சக்திகளாம்! யார் தேசவிரோதிகள்? ராணுவத்தில் பல்லாயிரக் கணக்கில் உயிரைப் பணயம் வைத்து நிற்கிறானே தமிழன் அந்த தமிழர்கள் தேச விரோதிகளா? கல்வான் பள்ளத்தாக்குதலிலும் தமிழக வீரர்கள் இறந்துள்ளனரே! புல்வாமா தாக்குதலிலும் தமிழக வீரர்கள் இறந்துள்ளனரே! நாங்களா தேச விரோதிகள்?

புல்வாமா தாக்குதல் ஒன்றிய பா.ஜ.க அரசின் அலட்சியத்தால் நிகழ்ந்தது என்று ஆளுநர் சத்தியபால் மாலிக் குற்றம் சுமத்தினாரே! அதை வைத்து நீங்கள் 2019 பாராளுமன்றத் தேர்தலில் வாக்கு அறுவடை செய்ததை மறந்து விட்டீர்களா? உயிர் கொடுக்கத் தமிழர்கள்! ஒன்றிய ஆட்சியில் பா.ஜ.க! சீனாவுடன் நடந்த போரின் போது திராவிட நாடு கோரியதை கைவிட்டவர் அறிஞர் அண்ணா. இந்தியா தான் முக்கியமென்றார். கார்கில் யுத்தத்திற்கு இந்திய அரசிற்கு மற்ற மாநிலங்களை விட அதிக நிதி கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். நாங்களா தேசவிரோதிகள்?

சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாம். உள்துறை அமைச்சர் அதிகாரத்தில் உள்ளவர் அவருக்கு சரியான தகவல் உடனே கிடைக்கும். உ.பி.யில் பா.ஜ.க ஆட்சியில் சட்டம் ஒழுங்கு எப்படி உள்ளது? சம்பலில் மசூதியை இடிக்க முயன்று 5 இஸ்லாமிய இளைஞர்களை சுட்டுக் கொன்றது யார்? பட்டியலின மக்கள் அங்கே படும் பாட்டை நாடு அறியாதா? இப்படித் தான் பா.ஜ.க ஆளும் மற்ற மாநிலங்களிலும் நிலவரம் உள்ளது. குஜராத்தில் நாடாறிந்த பில்கிஸ்பானு வழக்கு. குற்றவாளிகளுக்கு மாலை போட்டு வரவேற்றவர் இந்த அமித்ஷாதான். அந்த குற்றவாளிகளை மீண்டும் சிறைக்குள் தள்ளியது உச்சநீதிமன்றம் இதை மறுக்க முடியுமா?

2026ல் தமிழ்நாட்டில் ஆட்சியில் அமரப் போகிறார்களாம். அதற்கு உதாரணமாக 2025ல் டெல்லி சட்டமன்றம் சாட்சியாம்! இது தொடருமாம். 2025 வேறு 2026 வேறு. 2026ல் பா.ஜ.க தற்போது வைத்துள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளையும் இழக்கப் போவது நிச்சயம்.

எட்டு முறை பிரதமர் மோடி அவர்கள் வந்தார் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு சீட் வெல்ல முடிந்ததா? இப்போது அமித்ஷா அவர்கள் சவால் விட்டுள்ளார். இவர் வேண்டுமானால் 16 முறை வரட்டும் பிரச்சாரம் செய்யட்டும். என்ன அறுவடை செய்கிறார் என்பதைப் பார்ப்போம். நெல்லை தி.மு.க அள்ளும், கருக்காய் அதாவது பதரை பா.ஜ.க தான் அள்ளும். இது நடக்கத் தான் போகிறது.

தமிழ்நாட்டிற்கு மறுசீரமைப்பில் ஒரு தொகுதி கூட குறையாதாம்? அமித்ஷா கூறிவிட்டார் போதாதா? என்கிறார் அண்ணாமலை. உ.பி.க்கு, பீகாருக்கு, ம.பி.க்கு எத்தனை இடங்கள் அதிகரிக்கும் என்பதை வெளியிட்டு அதே அளவு தமிழ்நாட்டிற்கும் அதிகரிக்கும் என்று அமித்ஷா அவர்கள் கூறினாரா?

கல்வியில் சிறந்தவர்கள் தமிழர்கள். அதனால் குடும்பக் கட்டுப்பாட்டை சரியாக அமல்படுத்தினார்கள். உண்மையில் அதற்காக ஒன்றிய அரசு ஊக்கப்படுத்த பீகாரை விட கூடுதலாக ஒரு தொகுதியையாவது கூடுதலாக தரவேண்டும். அதை விடுத்து தொகுதி குறையாது என்றால் என்ன அர்த்தம்? அண்ணா கைவிட்ட திராவிட நாடு கோரிக்கையை தென்மாநிலங்களை கேட்க வைத்து விடாதீர்கள்? இந்தி பேசும் மாநிலங்கள் மட்டும் இந்தியா அல்ல!

மூன்றாவது மொழியை ஏற்காவிட்டால் கல்வி நிதி தரமாட்டோம் என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதான் கூறியுள்ளார். உடனே அண்ணாமலை அவர் இந்தியை திணிக்க கூறவில்லை. ஏதாவது ஒரு மொழியை பயிலச் சொல்கிறார் என்கிறார்.

இருமொழிக்கொள்கை எங்கள் கொள்கை. சரி வாதத்திற்கு வைத்துக் கொள்வோம் இந்தி இல்லை வேறு மூன்றாவது மொழி எங்களுக்கு எதற்கு? விருப்பப்படுபவர்கள் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். எங்களை ஏன் நிர்பந்திக்கிறீர்கள்?

தமிழ் மொழியை போற்றுகிறாராம் வளர்க்கிறாராம் பிரதமர் மோடி அமித்ஷா அள்ளி விட்டுள்ளார். ஆம் தமிழ் வளர்ச்சிக்கு ரூ.74 கோடி சமஸ்கிருத வளர்ச்சிக்கு ரூ.1,488 கோடி. இதுதான் தமிழ்நாட்டில் 8 கோடி பேர் பேசும் தமிழ் மொழியை பா.ஜ.க வளர்க்கும் இலட்சணமா? சமஸ்கிருதம் எத்தனைப் பேர் படிக்கிறார்கள்?

ஐ.நா.வில் இந்தியை கொண்டுவர ரூ. 500 கோடி ஒதுக்கியுள்ளார். மூத்த மொழி தமிழ் இது நமக்குப் பெருமை என்று யார் சொன்னார்? பிரதமர் மோடி சொன்னார். உலகில் 124 நாடுகளில் தமிழர்கள் வாழ்வதாக கூறப்படுகிறது. கிட்டத்தட்ட 11 கோடி பேர் தமிழ் பேசுகிறார்கள். இலக்கியம் இலக்கணம் ஏராளமாக தமிழில் உள்ளது. எந்த இலக்கியம் இந்தியில் உள்ளது? ஏன் ஐ.நா.வில் உலக மூத்த மொழி தமிழ் இருக்கட்டும் என்று பிரதமர் மோடி நிதி ஒதுக்க வேண்டியது தானே!

மகாத்மா காந்தி ஆங்கிலம் அறிந்தவர் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். அவர் தனது சுயசரிதையை ஆங்கிலத்திலா எழுதினார்? தன் தாய் மொழியிலான குஜராத்தியில் தான் எழுதினார். ரவீந்திர நாத்தாகூர் வசதி படைத்தவர், ஆங்கிலம் நன்கு அறிந்தவர். அவர் தேசியப் பாடலை ஆங்கிலத்தில் எழுதவில்லை, வங்க மொழியில் தான் எழுதினார்.

உலகச் சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ் டாஸ் கேப்பிட்டல் அதாவது மூலதனம் எந்த மொழியில் எழுதினார்? தனது ஜெர்மன் மொழியில் தான் எழுதினார். பிறகு தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. அதில் வள்ளுவர் ஒரு இடத்தில் கூட தமிழ் என்றச் சொல்லைப் பயன்படுத்தவில்லை. எந்த மதத்தையும், எந்த மன்னன் பெயரையும், எந்த கடவுள் பெயரையும் குறிப்பிட்டு எழுதவில்லை.

அதனால்தான் அது உலகப் பொதுமறையாக விளங்குகிறது. பைபிள் அதிக மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. குரான் அதற்கடுத்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக உலகில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் தான்.

சங்கத் தமிழில் மதம் பற்றி கூறவில்லை, சாதி பற்றிக் கூறவில்லை. அதைத் தான் தந்தை பெரியார் பெண்ணுரிமை காக்கப்பட வேண்டும் மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமென்றார்.

சதி அதாவது உடன்கட்டை ஏறுவதை ஒழித்தவர் ராஜாராம் மோகன்ராய். அவர் தனது வங்க மொழியில் தான் படித்தார் எழுதினார். ஆங்கிலத்தில் எழுதவில்லை ஆனால் அவருக்கு ஏழு மொழி தெரியும். விரும்பியது தன் தாய் மொழி வங்க மொழியைத் தான்.

கருப்பின மக்களுக்காக வாதாடியவர் போராடியவர் மார்ட்டின் லூதர்கிங். "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என அவர் உரையாற்றினார். உலக கருப்பினத்தவர்கள் அந்தப் பேச்சால் ஒன்றிணைந்தனர். மனிதர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் சமம் என்பது தான் அதன் சாராம்சம். "ஐ கேவ் எ டீரிம்" என்பது தான் அந்த உரை.

திருட்டுத் தனமாக தான் நினைப்பதை சாதிக்க மாநில உரிமையை பறிக்க முயலும் ஒன்றிய பா.ஜ.க அரசை வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் தமிழர்களை ஒருங்கிணைக்க தந்தை பெரியாராக, அறிஞர் அண்ணாவாக, முத்தமிழறிஞர் கலைஞராக திகழ்ந்து நம்முதல்வர் தளபதி அவர்கள் தமிழுக்கு தீங்கு என்றால் தன் உயிரே போனாலும் பரவாயில்லை. என் எதிர்கால சந்ததியினரை எவ்வகையிலும் காப்பேன் என்று களம் கண்டுள்ளார்.

அமித்ஷா அவர்களின் கதைகளை பொய்யாக்கி காட்டுவார் எம்முதல்வர். போராடி பெறுவதே வீரம்! போராடி வெல்பவர் நம்முதல்வர்!